மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஶ்ரீ சுபகிருது வருடம் ஆவணித்திங்கள் 10 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 362/2021-ல்**

**அசல் வழக்கு எண். 72/2020**

பானுமதி அம்மாள் .... மனுதாரர்/வாதி

// **எதிர்**//

ரவி .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 21.10.2021 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று 26.08.2022 என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. ராமகிருஷ்ணன், திருமதி. R. கலையரசி, திரு. S. பாலகுமார்** ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. விஜயன், திரு. K. சிவசுந்தர், திரு. M. நிலவழகன், திரு. R.கண்ணதாசன்** ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(26.08.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

## உத்தரவு

இம்மனுவானது, வசதி உரிமை பரிகாரம் கோரி தொடரப்பட்ட மனு சொத்தை ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி சிபிசி 1908 கட்டளை 26 விதி 9-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மன்னார்குடிடவுன், எடத்தெரு, வடசரகில் டவுன் சர்வே எண். 3374-ல் அமைந்துள்ள தாவா சொத்தானது AKLE

பாதையாகும். எதிர்மனுதாரர்/பிரதிவாதி வீடு மனுதாரரின் வீட்டிற்கு அடுத்த கீழ்புறம் உள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடுப்பகுதியான BCHI பகுதியை கிரயம் பெற்றுள்ள சொத்திற்கு தென்புறம் மற்றும் வடபுறம் எவ்வித பாத்தியதையும் கிடையாது .

CDGH பகுதியில் உள்ள கழிவறை மற்றும் கிணறு இருப்பதால் தாவா பாதை வழியாகத்தான் செல்ல முடியும். ஆனால் தேவையற்ற பாதையை பயன்படுத்த இயலாமல் தட்டி வைக்கப்பட்டுள்ளதால் பாத்தியதை உரிமை கேட்டு அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, AKLE தாவா ஸ்தலத்தை பொதுபாதையை ஆணையர் நியமனம் செய்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பொது எதிருரையின் சுருக்கம்</u>:-**

மனுதாரர் தான் தாக்கல் செய்த வழக்கின் உண்மை தன்மைகளை ஆவணங்கள் மூலமாகவும், சாட்சிகள் மூலமாகவும் நிரூபிக்க வேண்டுமே ஒழிய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அதன் அடிப்படையில் ஆவணங்களை சேகரிக்ககூடாது. வழக்கு சொத்தான T.S.No.3374 ஆனது பாகப்பிரிவினை சம்மந்தமாக அ.வ.எண்.114/75 ல் நடைபெற்று இறுதி தீர்ப்பாணை 1859/1987-ன்படி அவரவர்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாவா சொத்தானது பொது பாதை என்பதற்குரிய வருவாய் துறை ஆவணங்களையோ, தாவா சொத்திற்குரிய மூல ஆவணங்களையோ தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் தாழ்த்தவேண்டும் என்ற கெட்டநோக்கத்துடன் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை தள்ளுபடி

செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 5. | **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.** |

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில்......

இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலிக்கும்போது மனுதாரர் தரப்பில் தனக்கு பாதைவசதி உரிமை இருப்பதை நீதிமன்றத்தில் தெரியப்படுத்த வழக்கறிஞர் ஆணையர் மூலம் மேற்படி ஸ்தலத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதைப்பொறுத்து, எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாவா சொத்து சம்மந்தமாக பாகப்பிரிவினை செய்து அதில் இறுதிநிலைத்தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு ஆணையர் உதவியுடன் ஏற்கனவே அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இம்மனுவானது எதிர்மனுதாரரை அலைக்கழிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் எனவே, மனுவினை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

ஒரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையை பிரிதொரு வழக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்கான எந்தவிதமான சட்டதடையும் இல்லாத சூழ்நிலையில், ஒரே தாவா சொத்தைப்பொறுத்து காலசூழ்நிலையில் ஏற்பட்ட புவியியல் மாற்றங்களை பொறுத்து மேற்படி மாற்றங்கள் எந்தவகையில் தரப்பினருடன்

சம்மந்தப்பட்டது என்பதை உறுதி செய்ய ஓர் ஆணையரை நியமிப்பதால் இந்த எதிர்மனுதாரருக்கு எந்தவித கஷ்டநஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதையும் கருத்திற்கொண்டு மற்றும் வழக்கின் சூழ்நிலை ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு இம்மனுவினை அனுமதிப்பது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில்**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

(1). நீதிமன்ற ஆணையராக திரு. **V.K.கோபாலகிருஷ்ணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ. 10,000/- நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, இருதரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளவீடு செய்து 2 மாத காலத்திற்குள் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்குரிய ஊதியம் **ரூ. 10,000/-த்தை** நேரடியாக 10 தினங்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகையை **09.09.2022 ம்** தேதிக்குள் செலுத்தாதபட்சத்தில் இம்மனு மீதான நடவடிக்கை கைவிடப்படும் என்பது தெரியப்படுத்தப்படுகிறது.

(2). இந்நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தின் பணிகளை செய்யும் அலுவலர் என்ற வரையரைக்குள் வரும் நபர் ஆவார். அவருக்கு அழைப்பாணை அனுப்ப சாட்சிகளை விசாரிக்க என அனைத்து உரிமைகளும் உள்ளது என்பது உறுதி செய்யப்படுகிறது. மேற்படி ஆணையர் வேலையில் யார் இடையூறு செய்தாலும் அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடர முழுஅதிகாரம் அளிக்கப்படுகிறது.

(3).மேற்படி ஆணையர் கிராம நிர்வாக அலுவலர், நிலஅளவையர் ஆகியோருக்கு உரிய முறையில் அறிவிப்பு கொடுத்து மேற்படி இரு நபர்களும், முன்னிலையாக

அல்லது ஒத்துழைக்காத பட்சத்தில் அவர்களது மேல் அதிகாரிகளுக்கு அவர்கள் மீது துறைரீதியாகவும் அதனுடன் சேர்த்து குற்றவியல் நடவடிக்கைகள் தொடுக்கவும் பரிந்துரை செய்ய அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(4). மேற்படி ஆணையர் தனது பணியினை செய்யும்போது தேவை ஏற்படின் காவல்துறை பாதுகாப்பையும் பெற்றுக்கொள்ள அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி ஆள்வரை எல்லையுள்ள காவல்நிலைய பொறுப்பு அதிகாரி மேற்படி ஆணையர் உத்தரவுக்கு சட்டத்திற்குட்பட்டு செயல்படவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

(5). இந்நீதிமன்ற ஆணையர் இவ்வுத்தரவை பெற்றுக்கொண்டபின் ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒருமுறை இந்த ஆணையர் பார்வையிடல் சம்மந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. மேற்படி ஆணையர் நடவடிக்கைக்கு ஒத்துழைக்காத தரப்பினர் குறித்த அறிக்கையை தேவை ஏற்படின் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

(6). இவ்வுத்தரவுப்படி இந்நீதிமன்றத்தால் தடை ஏதும் இல்லாதபட்சத்தில் இவ்வுத்தரவினை 2 மாதகாலக்கட்டத்திற்குள் நிறைவேற்றி முடிக்காத பட்சத்தில் ஆணையருக்கு வழங்கிய ஊதியத்தை திரும்ப செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (26.08.2022) அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2022.08.26 18:11:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி. (மு.கூ.பொ)